# திவுலப்பிட்டிய பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 20 ஆந் திகதியும் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 யூன் 17 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட திவுலப்பிட்டிய பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரத்துச் செய்யப்பட்டிருந்த 04 செயற்திட்டங்களின் மதிப்பீட்டுக் கிரயமான ரூபா 2,300,000 தொகை நிலுவையான ஏனைய வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்த்துள்ள உடன்படிக்கையில் ஈடுபட்டிராத 14 செயற்திட்டங்களின் மதிப்பீட்டுக்

கிரயமான ரூபா 8,639,907 தொகை கடன்கொடுத்தோராக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது சபையால் கையேற்கப்பட்டிருந்த கெகுணகஹலந்த காணியின் பெறுமதியான ரூபா 951,165 தொகை காணி கட்டிடக் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சிய ஆயுர்வேத மருந்துப் பொருள் இருப்புப் பெறுமதியான ரூபா 383,080 தொகை கணக்கிடப்பட்டிராததுடன் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருந்துப் பொருட்களின் பெறுமதியான ரூபா 625,000 தொகை வருமானத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிராமையால் ரூபா 97,435,975 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.3 தீர்க்கப்படாத கணக்குகள்

முற்பணமானது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவுற்றதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் பின்வரும் ரூபா 5,442,801 தொகையான முற்பணம் 2013 பெப்ரவரி 19 இல் உள்ளவாறும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்திற்கு மேலான மீண்டுவரும் செலவினம் ரூபா 28,824,949 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திற்கு மேலான வருமானம் ரூபா 3,867,075 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு உரித்தாக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 முத்திரைக் கட்டணம்

2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை கொழும்புக் காணிப் பதிலாளர் அலுவலகத்திலிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த முத்திரை வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வீதவரி

(அ) 2007 பெப்ரவரி 09 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டிருந்த அறிவித்தலின் மூலம் திவுலபிட்டிய சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியை முன்னேற்றப்பட்ட பிரதேசமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் முன்னேற்றப்பட்ட பிரதேசமாக வெளியிடப்பட்ட பகுதிகளில் ஆதனங்களின் வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் சபையால் வீதவரி நிர்ணயிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட 123 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 15 பிரிவுகளிடமிருந்து மாத்திரம் வரி அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2008 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டு மீள் மதிப்பின் மூலம் மேலதிகமாக பட்டியலிடப்பட்ட வீதவரியின் பெறுமதி ரூபா 4,197,906 தொகை 2011 யூன் மாதம் எடுக்கப்பட்டிருந்த சபைத் தீர்மானத்தின் பிரகாரம் நிலுவையாகக் காணப்பட்ட வீதவரிக் கணக்கிலிருந்து

பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 182 ஆம் பிரிவின் பிரகாரம் இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

05 செலவினத் தலைப்பின் ஏற்பாட்டிற்கு மேலாக ரூபா 32,827,742 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) நிதிக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிர்வாகம்

(உ) இருப்புக் கட்டுப்பாடு

(ஊ) சொத்துக்கள் முகாமைத்துவம்